**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 149/2025**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ம் நாள் செவ்வாய் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.10.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ராஜேந்திரன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு கூடுதல் முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1) 15.02.1974- பாக பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும்

2) 08.06.2013 மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற OS. 67/2013 பிராது சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும்

3) 12.09.2019 மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற OS. 67/2013 தீர்ப்பாணை சான்று நகல்வா.சா.ஆ.3 ஆகவும்

4) 1975 முதல் 2025 தாவா சொத்திற்கான வில்லங்கச்சான்று வா.சா.ஆ.4 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.